1974 ஏப்ரல் 11]

தில் பத்தாண்டு, பதினைந்து ஆண்டு காலமாகக் கோரிக்கை இருக்கிறது. வெள்ள காலத்தில் ஜனங்கள் வெளியே வரமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட இடங்களிலிருந்து ஜனங்கள் வெளியே வர பாலம் கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதை அதர் ரோட்ஸ் ஸ்கீம் என்ற திட்டத்தின்கீழ்ப் பரிசிலிக்கலாம்.

New Dams in Nanguneri taluk.

* 818 *Q.*—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stages of Pachayar Dam and Kodumudi Dam schemes in Nanguneri taluk, Tirunelveli district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு, கொடுமுடியாறு ஆகியவற்றின் குறுக்கே முறையே ரூபாய் 225 லட்சம், ரூபாய் 72 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், அணை கட்டுவதற்கான தலைமைப் பொறியாளரின் (பாசனம்) செயற் குறிப்புகள் பற்றி வருவாய்த்துறை வாரியத்துடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது. வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்புரைகள் வரப்பெறுவதன் மேல் முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. கணபதி : இந்த இரண்டு அணைகளும் நாங்குநேரி, மேலப்பாளையம், இராதாபுரம் ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் உட்பட்டிருக்கிறது. அவை வறண்ட பிரதேசமாக இருப்பதாலும், 1974-75-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதாலும் இதை விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதிலிருந்தே அரசுக்கு இருக்கும் அக்கறையை உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. டி. கணபதி : பச்சையாறு அணைத் திட்டப் பகுதியில் அட்டாமிக் ஸ்டேஷன் அமைய இருப்பதால் அதற்குத் தண்ணீர் தேவையாக இருக்கிறது. ஆகவே, மழை காலத்தில் கடலில் சென்று விழுகும் தண்ணீரைப் பயன்படுத்தி அடாமிக் ஸ்டேஷனுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் குறிப்பிடுவது போன்ற தகவல் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்குள்—ஏறக்குறைய இரண்டுமே கட்டுப் படியாகக் கூடிய திட்டங்கள், லாபகரமாக இருக்கும் என்ற நிலையில் நிறை வேற்றப்படும். வருவாய்த் துறை வாரியத்திலிருந்து அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது. அது வந்தவுடன் முடிவெடுக்கப்படும்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்தத் திட்டத்தால் எவ்வளவு ஏக்கரா அந்த வட்டாரத்தில் பயன் பெறும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பச்சையாறு அணைத் திட்டப் பகுதி யில் ஏற்கனவே பாசனம் செய்யப்பட்டு வரும் 10,203 ஏக்கர் நிரந்தரமாகத் தண்ணீர் பெற வாய்ப்பு இருக்கிறது. ஷார்ட் டர்ம் பயிர் 3,313 ஏக்கர் பலன் பெறும். அது போக 832.57 ஏக்கர் புதிதாகப் பாசனத்திற்கு வரும். கொடு முடியாறு நீர்த்தேக்கத்தால் 4,809.86 ஏக்கர் நிரந்தரமாகத் தண்ணீர் வசதி பெறும். 823.87 ஏக்கர் குறுகிய காலப் பயிருக்குத் தண்ணீர் கிடைக்கும். அதுபோக புதிதாக 321.16 ஏக்கர் பாசன வசதி பெறும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த இரண்டு முக்கியமான திட்டங் களுக்கும் எவ்வளவு செலவாகும் என்ற விவரத்தை எல்லாம் அமைச்சர் அவர் கள் தந்திருக்கிறார்கள். இது எகனமிக் யூனிட்டாக இருக்குமா ? போதிய அளவு தண்ணீர் கிடைக்குமா என்ற ஆராய்ச்சி எல்லாம் முடிந்து சாதகமாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பொருளாதாரத் துறையில் நல்ல கட்டுபடியாகக் கூடியதாக இருக்குமென்று நம்பப்படுகிறது. தண்ணீர் இருக்குமென்றும் நம்பப்படுகிறது. வருவாய்த் துறையிலிருந்து அறிக்கை வந்தவுடன் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய பகுதிகள் நம்முடைய மாநிலத்திலேயே மிகவும் வறட்சியான பிரதேசங்கள். சம்மர் சீசனில் குடிக் கக்கூடத் தண்ணீர் கிடைக்காது. இது எகனமிக் யூனிட் இல்லையென்று ஒரு வேளை வருவாய்த் துறையிலிருந்து அறிக்கை வந்தாலும் அங்கிருக்கும் சூழ் நிலைகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் குறிப்பிடுகிற அத்தனை யையும் அரசு பரிசீலித்து பரிவோடு, இரக்க சுபாவத்தோடு டோக்கன் கிராண்ட் ஒதுக்கியிருக்கிறோம். வருவாய்த்துறை அறிக்கை வந்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.